**சுருக்கம்**

சமூக சீர்திருத்தத்துறை – அறிவிப்பு - சமூக நீதிக் கண்காணிப்புக் குழு – கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் அகியவற்றில் சமூகநீதி அளவுகோல் முறையாக முழுமையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதை கண்காணிக்க குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது – குழுவின் பதவிக் காலத்தினை உரிய பணியாளர்களுடன் மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**சமூக சீர்திருத்தத் துறை**

அரசாணை (நிலை) எண். 07

நாள் 27.11.2023
சோபகிருது வருடம், கார்த்திகை - 11
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.02, சமூக சீர்திருத்தத்துறை, நாள் 24.12.2021.
2. அரசாணை (ப) எண்.02, சமூக சீர்திருத்தத்துறை, நாள் 24.12.2021.

*****

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கவும், வழிகாட்டுவதற்கும், அதனைச்

செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்வதுடன், இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை செய்யவும் "சமூக நீதிக் கண்காணிப்புக் குழு"வினை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்டு நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டது:-

1. பேராசிரியர் திரு. சுப.வீரபாண்டியன் - தலைவர்
2. முனைவர் கே. தனவேல், இ.ஆ.ப., (ஓய்வு) - உறுப்பினர்
3. பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ் - உறுப்பினர்
4. கவிஞர் திரு. மனுஷ்யபுத்திரன் – உறுப்பினர்
5. திரு. ஏ. ஜெய்சன் - உறுப்பினர்
6. பேராசிரியர் முனைவர் ஆர். இராஜேந்திரன் - உறுப்பினர்
7. திரு. கோ. கருணாநிதி - உறுப்பினர்
8. மருத்துவர் சாந்தி ரவீந்திரநாத் - உறுப்பினர்

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சமூக நீதிக் கண்காணிப்புக் குழு செயல்படுவதற்குத் தேவையான பணியிடங்களை புதிதாகத் தோற்றுவித்தும், நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

3. அரசாணை (நிலை) எண்.02 சமூக சீர்திருத்தத்துறை, நாள் 24.12.2021-இல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, இக்குழுவின் பதவிக் காலம் 23.12.2023 அன்றுடன் முடிவடையும் நிலையில், சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் அவசியம் கருதி, அக்குழுவின் பதவிக் காலத்தினை தற்போதிருக்கும் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அரசாணை (ப) எண். 02 சமூக சீர்திருத்தத்துறை, நாள் 24.12.2021-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களுடன் எவ்வித மாற்றமுமின்றி மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யலாம் எனக் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

..3..

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.667 (e-file)/ நிதி (ச.ந)/2023, நாள் 22.11.2023–இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த.ஆபிரகாம்**
**அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

<u>தலைவர்</u>

1. பேராசிரியர் திரு. சுப. வீரபாண்டியன்,
எண்.28, S.B.S. காலனி, ஆழ்வார்திருநகர், சென்னை – 600 087.

<u>உறுப்பினர்கள்</u>

2. முனைவர் கே. தனவேல், இ.ஆ.ப., (ஓய்வு),
HIG 90, 8-வது குறுக்கு தெரு, முகப்பேர், வெஸ்ட் கார்டன்,
நொளம்பூர், பகுதி-2, சென்னை - 600 037.
3. பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ்,
25, பாரதி தெரு, V.G.P. சாந்தி நகர்,
பள்ளிக்கரணை, சென்னை - 600 100.
4. கவிஞர் திரு.மனுஷ்யபுத்திரன்,
புதிய எண்.5, (பழைய எண்.13),
பரமேஸ்வரி நகர் முதல் தெரு, அடையார், சென்னை - 600 020.
5. திரு. ஏ. ஜெய்சன்,
எண்.15A/27, A.K. சாமி நகர்,
6வது தெரு, கெல்லீஸ்,
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
6. பேராசிரியர் முனைவர் ஆர். ராஜேந்திரன்,
14, A முதல் தெரு, அருளானந்தம்மாள் நகர்,
தஞ்சாவூர் – 613 007.
7. திரு கோ. கருணாநிதி,
109/1, பேஸ் பிரனா அபார்ட்மென்ட், பிளாக் 6, 3-வது தளம்,
கதவு எண்.T4, பாடிக்குப்பம் சாலை, அண்ணாநகர், சென்னை-600 101.

..4..

8. மருத்துவர் சாந்தி ரவீந்திரநாத்,
A1, அம்மன் அப்பார்ட்மெண்ட்ஸ்,
எண்.41, சாவடி தெரு, பல்லாவரம், சென்னை - 600 043.

அனைத்துத் துறை செயலாளர்கள், சென்னை – 600 009.
அனைத்துத் துறைத் தலைவர்கள் (தலைமைச் செயலகத்துறை வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-I, II), சென்னை – 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 009.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை – 600 009.
இயக்குநர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை – 600 015.
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை- 600 002.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை – 600 009.
அரசுச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், சமூக சீர்திருத்தத்துறை சென்னை – 600 009.
நிதி (ச.ந/வ.செ.பொ.I/II/மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை – 600 009.
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை – 600 009.
கூடுதல் தலைமைச் செயலாளர் (ம) வருவாய் நிருவாக ஆணையர், சென்னை – 600 005.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/11/2023

பிரிவு அலுவலர்